ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | சைவநெறி – I | நேரம் : 3 மணி. |
|---|---|---|

- **பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. கார்த்திகை மாதத் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரை அனுஷ்டிக்கும் விநாயகர் விரதம்,
   01. ஆவணி சதுர்த்தி 02. சங்கடஹர சதுர்த்தி
   03. விநாயக சதுர்த்தி 04. விநாயகர் சஷ்டி

2. "ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே..." பாடலில் குறிப்பிடப்படும் கண்டிகை என்பது,
   01. பஞ்சாட்சரம் 02. கமண்டலம் 03. விபூதி 04. உருத்திராக்கம்

3. மாதந்தோரும் இறந்தவர்களின் ஆன்ம சாந்திக்காக அனுஷ்டிக்க வேண்டியது,
   01. ஆடி அமாவாசை 02. அமாவாசை 03. சிரார்த்தம் 04. ஆட்டைத்திதி

4. 2¼ நட்சத்திரங்களின் தொகுதியாக அமைவது,
   01. இராசி 02. திதி 03. யோகம் 04. கரணம்

5. "பிரமன் தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி..." இதில் கூறப்படும் நிகழ்வு,
   01. விநாயகர் கஜமுகாசுரனை சங்காரம் செய்தமை.
   02. முருகன் சூரனை சங்காரம் செய்தமை.
   03. வீரபத்திரர் தக்கனின் யாகத்தை அழித்தமை.
   04. வைரவர் பிரமனின் ஐந்தாவது தலையை கொய்தமை.

6. அருள் வடிவான சக்தி அறிவு மயமான சிவத்தோடு கலந்து பிரபஞ்ச இயக்கத்தை குறிக்கும் மகோற்சவ நிகழ்வாக திகழ்வது,
   01. கொடியேற்றம் 02. திருக்கல்யாணம்
   03. வேட்டைத்திருவிழா 04. தேர்த்திருவிழா

7. அருணகிரிநாதருக்கு தன் திருக்கோலத்தைக் காட்டிய முருகப்பெருமான், அருணகிரிநாதரின் நாவில் எழுதிய மந்திரம்,
   01. சரவணபவ 02. நமசிவாய 03. சிவாயநம 04. ஓம் விக்னாய நம

8. சுப முகூர்த்த நிர்ணயம் பார்க்காது செய்யப்படும் கும்பாபிஷேகம்,
   01. ஆவர்த்தனம் 02. அநாவர்த்தனம் 03. புனராவர்த்தனம் 04. அந்தரிதம்

9. உயிர்களின் மும்மலங்களை நீக்குவதால் திருநீறுக்கு வழங்கப்படும் பெயர்,
   01. விபூதி 02. ஷாரம் 03. இரட்சை 04. பசிதம்

10. வாழ்வின் ஆதாரம் ஒழுக்கம். திருமணவாழ்வில் இணையும் தம்பதிகள் இருவரும் கற்பொழுக்கத்தில் தவறாது வாழ்தல் வேண்டும் என்பதை விளக்கும் திருமணக்கிரியை,

01. அம்மி மிதித்தல்
02. அருந்ததி காட்டல்
03. பாணிக்கிரகணம்
04. கோ தரிசனம்

11. சுயம்புலிங்கப் பிள்ளையார் அருளாட்சி புரியும் தலம்,

01. களுதாவளை
02. இணுவில்
03. கட்டுக்கலை
04. நல்லூர்

- **கீழேயுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு 12 – 16 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | மறைத்தல் | F | மகேஸ்வரன் | K | விருப்பு வெறுப்பு அற்றவன் | P | இறப்பு பிறப்பு அற்றவன் |
| B | உருவம் | G | எங்கும் நிறைந்தவன் | L | எண்ணற்றது | Q | அருவுருவம் |
| C | படைத்தல் | H | உருத்திரன் | M | குணங்குறி அற்றவன் | R | அழித்தல் |
| D | பிரமா | I | அருளல் | N | விஷ்ணு | S | சதாசிவன் |
| E | அருவம் | J | மலப்பிணிப்புடையது | O | காத்தல் | T | சார்ந்ததன் வண்ணமுடையது |

12. இறைவனின் மூவகை திருமேனிகளோடு தொடர்புடையது,

01. BEQ
02. BET
03. BHQ
04. DEQ

13. ஆன்மாவைப்பற்றிய விளக்கம் தருவது,

01. JKP
02. MPT
03. GKL
04. JLT

14. ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைவன் ஆற்றும் பஞ்சகிருத்தியங்கள்,

01. CIOQ
02. ACIOR
03. ACHQ
04. DEOI

15. பதியின் இயல்புகளாக காணப்படுவது,

01. GJMP
02. GKMP
03. JPTG
04. GJTK

16. ஐந்தொழில்களை ஆற்றும் மூர்த்திகள்,

01. COHRA
02. BAHCS
03. DFHNS
04. DOHEA

17. “ஆவுரித்து தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்கன்பராகில்...” எனப் பாடியவர்,

01. சம்பந்தர்
02. அப்பர்
03. சுந்தரர்
04. மணிவாசகர்

18. சங்கம வழிபாட்டின் பிரதிபலிப்பாக அன்னசத்திரம், தண்ணீர்ப்பந்தல் முதலியன அமைத்து தொண்டாற்றிய பெருமைக்குரியவர்,

01. திருக்குறிப்புத்தொண்டர்
02. மங்கையர்க்கரசியார்
03. இளையான்குடிமாறனார்
04. அப்பூதியடிகள்

19. நித்திய அன்னதானம் நடைபெறும் ஆலயங்கள்,

01. செல்வச்சந்நிதி, நயினை நாகபூசணி
02. மாவிட்டபுரம், நயினை நாகபூசணி
03. நல்லூர் முருகனாலயம், நயினை நாகபூசணி
04. மண்டூர் முருகனாலயம், நயினை நாகபூசணி

20. ஸ்ரீ சத்தியபாமா ருக்மணி பார்த்தசாரதி ஆலயமாக விளங்கும் ஆலயம்,
    01. பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம்
    02. உடப்பு திரௌபதி அம்மன் ஆலயம்
    03. மகிழவெட்டுவான் திரௌபதி அம்மன் ஆலயம்
    04. முந்தல் திரௌபதி அம்மன் ஆலயம்

21. சைவ வித்தியா விருத்திச்சங்கம் ஆரம்பிக்கப்பட காரணகர்த்தாக்களாக விளங்கியவர்கள்,
    01. இந்துபோர்ட் இராசரத்தினம், ஆறுமுகநாவலர்
    02. சேர் பொன். இராமநாதன், இந்து போர்ட் இராசரத்தினம்
    03. சேர் பொன். இராமநாதன், ஆறுமுகநாவலர்
    04. விபுலானந்தர், இந்துபோர்ட் இராசரத்தினம்

22. சுந்தரமூர்த்தி நாயனார் தனது இடக்கண் பார்வையினை பெற்றுக்கொண்டபோது பாடிய பதிகம்,
    01. பிழையுள பொறுத்திடுவீர்...
    02. கடையானேன் எண்ணாத பிழை பொறுத்து..
    03. மீளா அடிமை உமக்கே ஆளாய்...
    04. இத்தனையா மாற்றை அறிந்திலேன்...

23. கந்தபுராண நூலாசியரான கச்சியப்பரின் தந்தையார்,
    01. அச்சுதகளப்பாளர்
    02. அருணந்தி சிவாச்சாரியார்
    03. அருண்மொழிதேவர்
    04. காளத்தியப்ப சிவாச்சாரியார்

24. ஈழத்திருநாட்டின் உயரமான கொடி மரத்தையுடைய பெருமைக்குரிய ஆலயம்,
    01. இணுவில் கந்தசுவாமி ஆலயம்
    02. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
    03. நல்லூர் கந்தன் ஆலயம்
    04. திருக்கேதீச்சரம்

25. தட்சிணகைலாச புராணம், கோணேசர் புராணம், கதிரைமலை பள்ளு முதலிய சைவ பிரபந்த நூல்கள் தோற்றம் பெற்ற காலம்,
    01. அநுராதபுரக் காலம்
    02. பொலனறுவைக் காலம்
    03. ஆரிய சக்கரவர்த்திகள் காலம்
    04. ஐரோப்பியர் காலம்

26. “வந்த காலன் தன் ஆருயிரதனை வவ்வினாய்க்கு உன்தன் வண்மை...” இப்பாடலடி மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற இறைவனின் திருவருட் செயலாக விளங்குவது,
    01. அப்பரை கடலில் மூழ்காது காத்தமை.
    02. மார்கண்டேயரை யமனிடம் இருந்து காத்தமை.
    03. இராவணனை சாமகானம் பாடச்செய்தமை.
    04. அபிமன்யுவிற்கு பால் கொடுத்து காத்தமை.

27. ஈடில்லா இன்பம் முத்திப்பேற்றில் கிடைக்கும் - முத்திப்பேற்றிற்கு உடல் மீது வைத்திருக்கும் பற்றையும் விடுதல் வேண்டும் என்பதை உணர்த்தும் சிவமூர்த்தம்,
    01. வைரவர்
    02. வீரபத்திரர்
    03. அர்த்தநாரீஸ்வரர்
    04. நடராஜர்

28. நாம் இறந்தபின் நமது உடல் உறுப்புகளை தேவையுள்ளவர்களுக்கு வழங்குவது,
    01. ஒப்புரவு
    02. ஈகை
    03. கொடை
    04. அன்பு

29. குருவருளால் ஆன்மாவை பீடித்துள்ள மலம் நீங்கும் என்பதற்கிணங்க இறைவனே குருவடிவாக வந்து அருளும் பேறு பெற்ற ஆன்மா,

01. சகலர், பிரளயாகலர் 02. பிரளயாகலர், விஞ்ஞானகலர்
03. விஞ்ஞானகலர் மட்டும் 04. சகலர், விஞ்ஞானகலர்

30. மனிதன் பிறப்பெடுத்து வாழுங்காலத்தில் ஆற்றும் வினைகள்,

01. சஞ்சிதம் 02. பிரார்த்தம் 03. பற்றற்றவினை 04. ஆகாமியம்

31. ‘முத்தமிழ் வித்தகர், பிரபோதசைதன்யர்’ எனும் பெயர்களையுடைய சமயப்பெரியார்,

01. இராமநாதன் 02. ஆறுமுகநாவலர் 03. விவேகானந்தர் 04. விபுலானந்தர்

32. திருமாலை போற்றிப் பாடிய அடியார்கள் அழைக்கப்படுவது,

01. நாயன்மார்கள் 02. அருளாளர்கள் 03. ஆழ்வார்கள் 04. சிவனடியார்கள்

33. சித்தாந்த அட்டக நூலை அருளியவர்,

01. மெய்கண்டார் 02. அருணந்தியார் 03. மறைஞானசம்பந்தர் 04. உமாபதியார்

34. பஞ்ச தோத்திரங்களில் இறுதியாகப் பாடப்படுவது,

01. திருப்பல்லாண்டு 02. திருப்புராணம் 03. திருப்புகழ் 04. கந்தபுராணம்

35. இறைவன் சர்வவியாபகர் எனும் இயல்பினை எடுத்தியம்பும் அருட்செயல்,

01. நரிகள் பரிகளாகியமை. 02. யமனை காலால் உதைத்தமை.
03. கூலியாளாக வந்து பிரம்படிபட்டமை. 04. பன்றி குட்டிகளுக்கு தாயாகியமை.

36. பொறிவாயிலாக பெறும் அறிவு பிரமாணம்,

01. பிரத்தியட்சம் 02. அனுமானம் 03. ஆப்தவாக்கியம் 04. சுலோகம்

37. “பொன்னார் திருவடிக்கென்று ஒன்றுண்டு விண்ணப்பம்..” எனப்பாடி மருணீக்கியார் இறைவனிடம் பெற்றுக் கொண்டது,

01. பொதிச்சோறு 02. சூல இடப குறிகள் 03. முத்துப்பல்லக்கு 04. பொற்றாளம்

38. திருவாலவாயுடையார் தொடக்கம் நம்பியாண்டார் நம்பி வரையிலான பன்னிருவர் பாடிய நூல்,

01. நாலாயிரதிவ்விய பிரபந்தம் 02. நாற்பத்தொரு பிரபந்தம்
03. கணேச தோத்திரப்பஞ்சகம் 04. சதமணித்திரட்டு

39. ஆன்மார்த்த லிங்க பூசை செய்வதற்கு பெற்று இருக்க வேண்டிய தீட்சை,

01. சமயதீட்சை 02. விசேட தீட்சை 03. நிர்வாணதீட்சை 04. ஆசாரிய அபிடேகம்

40. நான் என்ற அகந்தை நம்மில் இருந்து அழிவதற்கு செய்யவேண்டிய செயற்பாடு,

01. சமய கருத்தரங்கில் கலந்து கொள்ளுதல்
02. இறைவழிபாட்டில் ஈடுபடுதலும், நற்பண்புகளை கடைபிடித்தலும்
03. தமிழ் திரைப்படங்கள் பார்த்தல்
04. பெற்றோர்களை மதியாது நடத்தல்

ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | சைவநெறி – II | |
|---|---|---|

- **முதலாம், இரண்டாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. **சுருக்கமான விடை தருக.**
   i. வேதங்களும் ஆகமங்களும் எவ்வாறு தோற்றம் பெற்றன?
   ii. குங்குலியக்கலயர் இறைவனது திருவருளுடன் அருளிய அற்புதச்செயலினை தருக.
   iii. மாணிக்கவாசகர் அருளிய பனுவல்கள் நான்கு தருக.
   iv. அனுராதபுர மன்னர்களது ஆட்சிக்காலத்தில் சைவசமயம் வளர்ச்சி பெறுவதற்கு மன்னர்களது ஆதரவு கிடைத்தது என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக.
   v. புரட்டாதிச்சனி விரதம் மேற்கொள்ளுவோர் செய்யவேண்டிய வழிபாட்டு அம்சங்கள் நான்கு தருக.
   vi. சமூகத்தின் தேவை அறிந்து செய்யக் கூடிய ஒப்புரவுச் செயற்பாடுகள் நான்கு தருக.
   vii. இந்து மக்கள் தம் வாழ்வின் நடைமுறை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கடைப்பிடிக்கும் பஞ்சாங்க வகைகளைத் தருக.
   viii. இறைவனின் இரு நிலைகளை விளக்குக.
   ix. சிவனடியாரை வழிபாடு செய்வதால் எம்மிடம் வளர்க்கப்படும் இரு விடயங்களை கூறுக.
   x. ஈழத்திருநாட்டினை 'சிவபூமி' எனப்போற்றியவர் யார்? அவர் அருளிய திருமுறை யாது?

(10x2=20 புள்ளிகள்)

02. **பின்வரும் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.**
   i. உற்றுமை சேர்வது ...
   ii. தந்தது உன்தன்னை கொண்டது ...
   iii. யாவர்க்குமாம் இறைவற்கு ...
   iv. சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் ...
   v. தனம் தரும் கல்வி தரும் ...

(3+2x2=10 புள்ளிகள்)

03. 'அன்பு வழியில் அறிவுக்கண்ணை திறந்தது பெரியபுராணம், அறிவுக்கண்ணை திறந்தது சித்தாந்தம்'
   i. சமயக்குரவர்கள் யாவர்?
   ii. புற சந்தானக் குரவர்களையும், அவர்களின் குருபூசைத் தினங்களையும் அட்டவணைப்படுத்துக.
   iii. உமாபதி சிவாச்சாரியாரின் சித்தாந்த பணி எனும் தலைப்பில் சிறுகுறிப்பு எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

04. 'மன்னு மாமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்'
   i. சைவ சமயத்தின் பொது நூல், சிறப்பு நூல் ஆகியவற்றைத் தருக.
   ii. ஆகமங்களில் விரித்துரைக்கப்படும் ஆறு விடயங்களைத் தருக.
   iii. வேதத்தின் வகைகளையும் அவற்றுக்குரிய பகுதிகளையும், காண்டங்களையும் அட்டவணைப்படுத்துக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. ‘ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறையிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?’ - பெரியபுராணம்.

i. பெரியபுராணத்தின் ஆசிரியரையும், திருமுறையின் உள்ளடக்கத்தினையும் தருக.
ii. பெரியபுராணம் பாடப்படுவதற்கு முதல், வழி நூல்களாக அமைந்த நூல்களையும் அதன் ஆசிரியர்களையும் தருக.
iii. மேலே தரப்பட்டுள்ள பாடலில் சிவனடியார்களின் இயல்பு எவ்வாறு விபரிக்கப்படுகின்றது?

(2+3+5=10 புள்ளிகள்)

06. ‘அரிதாகக் கிடைக்கும் இம்மானிடப் பிறவியில் பிறந்தோம் இறந்தோம் என்றில்லாது வரலாறு சொல்ல வாழ்ந்து மடிவதே மானிடருக்கு சிறப்பு’

i. அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கையின் ஆட்சிக்காலத்தில் சைவசமயம் மீண்டும் எழுச்சி பெறுவதற்கு தம் வாழ்வை அர்ப்பணித்த சைவசமயப்பெரியார்கள் நால்வரைக் கூறுக.
ii. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சமய சுதந்திரம் காணப்பட்டமையினால் சைவ சமயத்தில் பல பிரபந்தங்களும் நூல்களும் தோற்றம்பெற்றன. அவற்றுள் சைவ விரதங்களின் சிறப்பினைப்பற்றி வரதபண்டிதர் அருளிய நூல்கள் மூன்று தருக.
iii. ஈழத்தில் சைவசமயம் வளர்ச்சி பெறுவதற்கு சைவ பரிபாலன சபை ஆற்றிய பணிகள் ஐந்தினை விளக்குக. (2+3+5=10 புள்ளிகள்)

07. **தரப்பட்டுள்ள தலைப்புகளில் இரண்டிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.**

i. எமது பாவபுண்ணியங்களை கணக்கிடும் சித்திரபுத்திரனார்.
ii. மனித வாழ்வை மேம்படுத்துவதற்கு வழிகாட்டும் தீட்சை.
iii. இன்று நாம் சைவசமயத்தவர் என கூறுவதற்கு வழிகாட்டிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.
iv. யாழில் அருளாட்சிபுரியும் பொன்னாலை வரதராஜப் பெருமாள்.
v. சைவ விழுமியங்கள். (2+3+5=10 புள்ளிகள்)



LOL.lk
Learn Ordinary Level
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර
G.C.E. O/L
විද්‍යාව
A9+
ඉංග්‍රීසි භාෂාව
ENGLISH LANGUAGE
සිංහල
G.C.E. O/L SINHALA
General English
• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams
සමනල දැනුම
විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank
Master Guide
WWW.LOL.LK
CASH ON DELIVERY
HOME DELIVERY
Whatsapp contact
+94 71 777 4440
Website
www.lol.lk
Order via WhatsApp
071 777 4440